வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி - 2024 யூன் 30 இல் முடிவடைந்த மூன்று மாதங்கள்

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் (''கம்பனி'') 2024 யூன் 30 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 யூன் 30 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 யூன் 30 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட

கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 36 இன் 96 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டு காலப் பகுதிக்குரிய இழப்பீட்டு நட்டத்திற்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளாமல் 2018 ஆம் ஆண்டின் போது இழப்பீட்டு நட்டத்திற்கான ஒதுக்கமாக இனங்காணப்பட்ட ரூபா 37,384,363 அந்த ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக கடன் பட்டோர் மீதியில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்ட போதும் இழப்பீட்டு ஒதுக்கம் ஒன்று உரிய காலப் பகுதிக்காக மேற்கொள்ளப்படவில்லை. கடன்பட்டோர் மீதி தொடர்பான விசாரணைக்கு நியமிக்கப்பட்ட குழு இந்த பிரச்சினைகளுக்கு அனுப்பி இழப்பீட்டு ஒதுக்கீட்டுக்காக இனங்காண வேண்டிய இழப்பீட்டு ஆபத்துக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றது. காண்பிக்கப்பட்ட ரூபா 37,384,363 இழப்பீட்டு ஒதுக்கம் தவிர ஏனைய கடன் பட்டோர் பிரதானமாக கமநல சேவை நிலையங்களில் இருந்தமையினால் உரிய காலப்	இழப்பீட்டு நட்டத்திற்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

		பகுதிக்காக இழப்பீட்டு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வில்லை.	
(ஆ)	திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டிய வட்டி அறவிட முடியுமான இழப்பீட்டுப் பணம், இறக்குமதி அடிப்படையில் கூட்டுப்பெறுமதி ரூபா 188,714,753 தொகை பலவருட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டதுடன் அந்த மீதிகளுக்கு உரிய இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 36 இன் பிரகாரம் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை.	திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டிய வட்டித் தொகையான ரூபா 185,830,554 தொகைக்காக திறைசேரியால் செலுத்துதல் எழுத்து மூலம் நிராகரிக்கப்படும் வரை இழப்பீட்டு ஒதுக்கீடுகள் மேற்கொள்ள முடியாது இருந்தது. ஏனையவைகளில் அறவிடக் கூடிய இழப்பீட்டுப் பணம் மற்றும் இறக்குமதி அடிப்படையிலான பெறுவனவுகள் மேற்குறிப்பிடப்பட்ட கடன் அறவிடல் குழுவிற்கு அனுப்பி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமத்தின் பிரகாரம் அறவிடப்படாமல் காணப்படுகின்ற மீதிகளுக்கு உரிய தேவையான ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	குத்தகை தவணைப் பணம் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 32,332,609 ஆன வாகனங்களுக்குரிய பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 1,007,625 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 255,374 மாத்திரம் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக காலப் பகுதியின் இலாபம் மற்றும் மோட்டார் வாகனங்களின் பெறுமதிகள் ரூபா 752,251 இனால் மிகைக் கணிப்பீட்டுக்கு உட்பட்டு இருந்தது.	கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுமானத் தேய்வு பெறுமதி சரியாக கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியால் விற்பனை செய்யப்படுகின்ற தேயிலை கிலோ கிராம் 50 கலவை உர மூட்டை ஒன்றின் விற்பனை விலையில் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற ரூபா 2,000 பெறுமதி கம்பனியின் விற்பனையாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்காமல் விற்பனைக் கிரயம் கணிப்பிடும் போது உர மாணியமாக அதன் கீழ் குறைத்துக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக காலப் பகுதியின் விற்பனைப் பெறுமதி ரூபா 76,440,000 இனால் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபைக்கு மாணிய விலையில் தேயிலை உரம் விற்பனை செய்வதுடன் கம்பனியால் ஏற்பட்ட செலவின இழப்பீட்டை மீளளிப்பு செய்வதற்காக பொதி ஒன்றுக்கு ரூபா 2,000 வீதம் ஆன மானியத் தொகை சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் கம்பனிக்கு வழங்கப்படுகின்றது. அந்த உர விற்பனைக்காக எமது VAT பட்டியலுக்கு எதிராக வழங்கப்படுகின்ற விற்பனைத் தொகை கம்பனியின் விற்பனை	காலப் பகுதிக்கு உரிய வருமானம் மற்றும் செலவினம் சரியாக இனங்காணப்படல் வேண்டும்.

		மற்றும் செலுத்த வேண்டிய VAT தொகையான கணக்கு ஏடுகளில் குறிப்பிடப்படுவதுடன் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற மானியத் தொகையில் முன்னைய காலப் பகுதியின் போதும் அரசாங்கத்தின் மாணியத் தொகை கிடைக்கின்ற போது விற்பனைக் கிரயத்தில் கழித்து குறிப்பிடப்படுகின்ற முறையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	
(இ)	மீளாய்வாண்டு காலப் பகுதிக்குரிய பெறுமானத் தேய்வில் குத்தகை வாடகைச் சொத்தின் பெறுமானத் தேய்வு ரூபா 255,374 உள்ளடக்கப்பட்டிருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது மீண்டும் குறைத்துக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சல் அப்பெறுமானத்தால் மிகைக் கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது.	கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகின்றோம். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காசுப் பாய்ச்சல் கூற்றில் உரிய சீராக்ககங்கள் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஈ)	நிலையான வைப்பு வட்டி வருமானம் கணிப்பிடும் போது ரூபா 158,432 குறைத்து கணிப்பிடப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டு காலப் பகுதயின் இலாபம் அப்பெறுமானத்தால் குறைகணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	ஒரு நிலையான வைப்பு ஒன்றின் முதலீட்டு கால எல்லை 02 நாட்களுக்கு குறைவாகக் காண்பிக்கப்பட்டமை இதற்கான காரணமாகும். சரி செய்வதற்கு நடவடிக்ஜ எடுக்கப்படும்.	நிலையான வைப்பு வட்டி வருமானம் சரியாகக் கணிப்பீடு செய்யப்படல் வேண்டம்.
(உ)	காசுப் பாய்ச்சல் கூற்றில் வட்டிப் பெறுவனவின் கீழ் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 70,044,062 மற்றும் நிலையான வைப்புக்களின் மூலதனமாக்கப்பட்ட ரூபா 73,538,362 வட்டி வருமானம் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 143,582,425 இனால் மிகைக் கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது.	கடந்த பல வருடங்களாக நிறுவனத்தின் வட்டி வருமானப் பெறுவனவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் மொத்த வட்டி வருமான முறைமையில் காண்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுப் பரிந்துரையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	காலப் பகுதிக்குரிய வட்டி வருமானம் சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டு காலப் பகுதியில் செலுத்தப்பட்ட குத்தகை வாடகை தவணைக் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 511,596 ஆக இருந்ததுடன் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 866,861 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக நிதிச் செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சல் ரூபா 355,265 இனால் குறை கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது.	வங்கியினால் தயாரிக்கப் பட்ட குத்தகை வாடகை தவணை பட்டோலையின் பிரகாரம் கம்பனியின் நடைமுறை மற்றும் நடைமுறையல்லா குத்தகைப் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தபட்டுள்ளது. மீளாய்வாண்டு காலப் பகுதியில் உரிய குத்தகை வாடகைப் பொறுப்புக்கள் செலுத்தி பூர்த்தி	குத்தகை தவணைப் பணம் செலுத்துதலின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

		செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது வங்கியினால் எமது கணக்கில் நேரடியாக அறவிடப்பட்டிருந்த குத்தகை வாடகை தவணைப் பெறுமதி ஆரம்ப பட்டோலையின் பெறுமதியை விட குறைந்த பெறுமதியை கொண்டிருந்தது. இதற்கு காரணமாக வழங்கப்பட்ட ஆரம்ப குத்தகை தவணைப் பணம் பட்டோலையில் ஏற்பட்டிருந்த வழுக்களுடான நிலைமையாக இருந்தமை வங்கி வெளியிட்டு இருந்தது. அதனால் நிதி நிலமைக்கூற்றில் குத்தகைப் பெறுமதியாக குறிப்பிடப்பட்ட நடைமுறைப் பொறுப்புக்களை விட பணமாக செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட குத்தகைப் பொறுப்பின் பெறுமதி ரூபா 355,265 இனால் குறைக்கப்பட்டமை இந்தப் பிரச்சணைக்கு காரணமாக இருந்தது.	
(எ)	2024 மார்ச் மாதத்திற்கு உரிய ரூபா 336,401 எரிபொருள் செலவினம் மீளாய்வாண்டு காலப் பகுதியின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டு காலப்பகுதியின் இலாபம் அப்பெறுமானத்தால் குறை கணிப்பீட்டு உட்பட்டு இருந்தது.	கணக்கு பிரிவிற்கு உரிய திகதியில் உரிய பட்டியல் கிடைக்காமையின் காரணமாக இந்த எரிபொருள் செலவினம் 2024 இன் நிதிக் கூற்றுக்களுக்காக அட்டுறு செய்ய முடியாது இருந்தது. அதனால் 2024.06.30 இல் முடிவடைந்த காலாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	காலப் பகுதிக்குரிய செலவினங்கள் சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஏ)	மீளாய்வாண்டு காலப் பகுதியில் செலுத்தப்பட்ட ரூபா 475,457 மொத்த வாகனக் காப்புறுதிக் கட்டணம் நிதிக்கூற்றுக்களில் காலப் பகுதியின் செலவினமாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதில் எதிர்வரும் நிதியாண்டிற்குரிய ரூபா 368,039 உள்ளடக்கப்பட்டதன் காரணமாக காலப் பகுதியின் இலாபம் அப்பெறுமதியால் குறை கணிப்பீட்டுக்கு உட்பட்டு இருந்தது.	கணக்கீட்டு வழுவாகும். சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காலப்பகுதிக்கு உரிய செலவினம் சரியாகக் கணக்கீடு செய்யபடல் வேண்டும்.
(ஐ)	2024 யூன் மாதத்திற்கான அட்டுறு ஆன ரூபா 574,814 மின்சார பட்டியலும், ரூபா 35,345 ஆன நீர்ப் பட்டியலும் ரூபா 73,342 ஆன தொலைபேசிப் பட்டியலும் ரூபா 581,905 ஆன பாதுகாப்புக் கட்டண பட்டியலும் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டு காலப் பகுதியில்	கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காலப்பகுதிக்கு உரிய செலவினங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல்

	இலாபம் ரூபா 1,068,669 இனால் மிகைக் கணிப்பீட்டுக்கு உட்பட்டு இருந்ததுடன் உள்ளீட்டு அடிப்படையிலான பெறுமதி சேர் வரி ரூபா 196,737 இனாலும், நடைமுறையல்லா பொறுப்புக்கள் ரூபா 1,265,406 இனாலும் குறை கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.		வேண்டும்.
(ஒ)	முன்னைய ஆண்டுக்கு உரிய கூட்டுப் பெறுமதி ரூபா 905,848 ஆன தொழில் சார் கட்டணம், சம்பளம், படிகள் மற்றும் எரிபொருள் செலவினங்களுக்கு உரிய கொடுப்பனவுகள் மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் இலாபம் அப்பெறுமானத்தால் குறை கணிப்பீட்டுக்கு உட்பட்டு இருந்தது. இந்த செலவினங்கள் முன்னைய காலப்பகுதியில் அட்டுறு ஆக்கப்படாமையின் காரணமாக ஆண்டின் இலாபம் அப் பெறுமதானத்தால் குறை கணிப்பீட்டுக்கு உட்பட்டு இருந்தது.	இந்த செலவினங்கள் முன்னைய காலப் பகுதியில் அட்டுறு ஆக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டு காலப் பகுதியில் செலவினமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.	காலப்பகுதிக்குரிய செலவினங்களை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஓ)	காசுப்பாய்ச்சல் கூற்றில் செலுத்தப்பட்ட வாடகையாக ரூபா 73,879,865 குறிப்பிடப்பட்ட போதிலும் மீளாய்வாண்டு காலப் பகுதியில் உள்ளபடியாக செலுத்தப்பட்ட வருமான வரிப் பெறுமதி ரூபா 64,563,061 ஆனதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 9,316,804 இனால் குறை கணிப்பீட்டு உட்பட்டு இருந்தமை அவதானிக்கப்பட்டது.	செலுத்த வேண்டிய மொத்த வருமான வரித் தொகை ரூபா 73,879,865 தொகையில் செலுத்தப் பட்ட வருமான வரித் தொகை ரூபா 64,563,061 ஆக இருந்ததுடன் எஞ்சியிருந்த ரூபா 9,316,804 தொகை நிறுத்தி வைத்தல் வரிகளுக்கு எதிராக ஈடு செய்யப்பட்ட வரிப் பொறுப்பாகும்.	காலப் பகுதிக்கு உரிய சரியான வரிப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும்.

1.5.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் ரூபா 32,438,030 குறுங்கால வங்கிக்கடன் பெறுமதி ஒன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் வங்கியில் இருந்து சமர்ப்பிக்கப்பட்ட கடன் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தில் அவ்வாறான கடன் பெறுமதி ஒன்று உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.	உரம் இறக்குமதி பட்டியலைத் தீர்ப்பதற்காக திறைசேரியில் இருந்து பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகின்ற போது கடன் தொகைக்கு உரியதாக மாற்றப்பட்ட மொத்த கடன் பெறுமதி ரூபா 8,925,525,813 ஆகும். இந்த கடன் பெறுமதியை கணக்கீடு செய்யும் போது நடைமுறை மற்றும் நடைமுறையல்லாப் பொறுப்பாக வெளிப்படுத்தப்படுகின்றது. இந்தக் கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்ட ரூபா 32,438,030 தொகையையும் உள்ளடக்கி நடைமுறை வங்கிக் கடன் பெறுமதி ரூபா 4,126,480,636 ஆகும். நடைமுறையல்லாக் கடன் பொறுப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 4,799,045,177 ஆகும். இந்த நடைமுறை கடன் தொகைக்காக மீதி உறுதிப்படுத்தல் மேற்கூறப்பட்ட ரூபா	கடன் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் பெறப்படல் வேண்டும்.

		8,925,525,813 ஆன மொத்த கடன் தொகைக்காக வழங்கப்பட்ட மீதி உறுப்படுத்தல் கடிதத்தில் உள்ளடங்கியுள்ளது.	
(ஆ)	பெறவேண்டிய வியாபாரக் கடன் மீதிகளுக்கு இடையே வ/ப லங்கா உரக் கம்பனியில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,983,717 மீதியும், ஏனைய பெற வேண்டிய கடன் மீதிகளில் ரூபா 960,000 மீதியும் உள்ளடங்கியிருந்த போதும் வ/ப லங்கா உரக் கம்பனியின் கணக்குகளில் அவ்வாறான செலுத்த வேண்டிய பெறுமதி ஒன்று வெளிப்படுத்தப்பட வில்லை. அதன் பிரகாரம் அந்த மீதிகளின் இருப்பு தொடர்பாக நிச்சயமற்ற நிலமை ஒன்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	மேலும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுத்து எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறவேண்டிய கடன் மீதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	25 கமநல சேவை நிலையங்களில் இருந்து கம்பனிக்கு அறவிட வேண்டிய மொத்தப் பெறுமதி ரூபா 4,917,722 ஆன 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதிக்காக மீதி உறுதிப்படுத்தலோ அல்லது அந்த மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய ஒன்றிணைந்த கம்பனியில் தீர்க்கப்படாத கடன்பட்டோர் மீதி தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் இந்த கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட மீதிகளும் அதன் ஊடாக தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கடன் அடிப்படையில் உரம் வழங்கியதற்காக 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 11,060,135 கடன்பட்டோர் மீதி காணப்பட்டதுடன் அந்த மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய ஒன்றிணைந்த கம்பனியில் தீர்க்கப்படாத கடன்பட்டோர் மீதி தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் இந்த கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட மீதிகளும் அதன் ஊடாக தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	கம்பனியின் வங்கிக் கணக்கிற்கு கிடைக்கப் பெற்ற ரூபா 4,293,639 இனங்காணப்படாத நேரடி வைப்புக்களில் ரூபா 3,914,000 தொகை 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கிடைக்கப் பெற்ற போதும் அந்தப் பெறுவனவுகள் கணக்காய்வுத் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	உரத்தை பெற்றுக் கொள்வதற்காக நிறுவனத்தின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக அனுப்பப்படுகின்ற போது வாடிக்கையாளர்களை இனங்காணக் கூடிய பிரகாரம் வாடிக்கையாளர்களின் பெயர் குறிப்பிட்டு நேரடியாக அனுப்பப்படுகின்றமையால் எங்களால் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறு மேற்கொள்ளாத சந்தர்ப்பங்களின் போது தொலைபேசி ஊடாக உரிய வங்கியுடன் தொடர்பு கொண்டு வாடிக்கையாளர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டு அவ்வாறு தீர்த்து வைப்பதற்கு முடியாத மீதிகள் ஆகும். இந்த மீதிகளுக்காக நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்து பரிந்துரையை பெற்றுக் கொள்வதற்கும் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் செயற்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	நேர் வைப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஈ)	நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 23,194,728 பணிக்கொடை வைப்புக்கள் மற்றும் மிகைப் பெறுவனவு மீதி (Customer Deposit & Over Received) கம்பனியால் உர விற்பனையின் அடிப்படையில் ஏற்பட்ட பல வருட காலம் முதல் தீர்த்து வைக்கப்படாமல் கொண்டு வரப்படுகின்ற 214 மீதிகளின் கூட்டுமொத்தமாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் இந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	நிலுவைக் கடன் மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.
(உ)	96 விநியோகத்தர்களிடம் இருந்து (Distributors) அறவிட வேண்டிய 05 வருடங்களை விஞ்சிய ரூபா 68,175,792 ஆன கடன்பட்டோர் மீதியின் சரியான	புதிய ஒன்றிணைந்த கம்பனியில் தீர்க்கப்படாத கடன்பட்டோர் மீதி தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று	நிலுவை கடன் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை

தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், அந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நியமிக்கப்பட்டுள்ளதுடன் இந்த கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட மீதிகளும் அதன் ஊடாக தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	எடுத்தல் வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 மே 07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் இறக்கும் திசெய்யப்பட்ட MOP உர இருப்பின் கம்பனியால் கையேற்கப்பட்ட உரம் மெற்றிக்தொண் 11,460 இற்கு உரிய ரூபா 1,260,600,000 இல் தவணைப் பணமாகத் திறைசேரிக்கு அனுப்புவதற்கு இணங்கியிருந்த ரூபா 157,570,000 யூன் மாதத்திற்கு உரிய தவணைப் பணத் தொகை திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	கடன் உதவி உரத்திற்கான பெறுமதி திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
(ஆ)	2016 பெப்ரவரி 29 இல் உள்ளவாறு கம்பனிக்கு உரியதாக எஞ்சியிருந்த திறந்த சந்தையில் விற்பனை செய்வதற்கு சந்தரப்பம் வழங்கப்பட்டிருந்த மாணிய உரத்திற்காக அரசாங்கத்தின் பங்களிப்புத் தொகையான ரூபா 2,112,468,040 திறைசேரிக்கு அனுப்பப்படாமல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் செலுத்த வேண்டிய மீதியாகக் காண்பித்து இந்த மீதிக்கு எதிராக கம்பனியின் பல்வேறு செலவினங்களை பதிவளித்து 2025.06.30 இல் உள்ளவாறு அந்த மீதி ரூபா 1,332,367,014 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.	இந்த மீதி தொடர்பான பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு பல கலந்துரையாடல் நடாத்தப்பட்ட போதிலும் இது தொடர்பாக பொதுத் திறைசேரியின் கணக்கில் எந்த ஒரு தகவல்களும் உள்ளடக்கப்படாது இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. பொதுத் திறைசேரியினால் கம்பனிக்கு தீர்த்து வைக்க வேண்டிய மானியத் தொகை மற்றும் மீளளிப்பு இந்த கணக்கிற்கு செலவு வைத்ததன் காரணமாக இந்த மீதி குறைவடைந்து உள்ளது. எனினும் இந்த மீதியை தீர்த்து வைத்தல் தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடப்படுகின்றது.	பொதுத் திறைசேரிக்கு மேற்கொள்ள வேண்டிய அனுப்புதல்கள் உரிய பிரகாரம் தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டு காலப் பகுதியில் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 40,815,855 நட்டம் ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மூன்று மாத காலப் பகுதியின் இலாபம் ரூபா 138,714,540 ஆகும். (கடந்த ஆண்டின் இலாபம் / 4) அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 179,530,395 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கட்டாய ஓய்வூதிய இழப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சேவையில் இருந்து விலகிச் சென்ற ஊழியர்களுக்காக செலுத்தப்பட்ட இழப்பீட்டுப் பணம் பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	அம்பாந்தோட்டை வாடகைக் காணியில் களஞ்சியம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 3,732,901 ஆரம்ப செலவினம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த காணியில் எந்த ஒரு நிர்மாணமும் இதுவரையிலும் மேற்கொள்ளப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அந்த காணிக்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு வரை வருடாந்தம் ரூபா 331,632 வாடகைத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் மூன்று மாத காலப்பகுதிக்கு உரிய சிக்கனமற்றதாக செலுத்தப்பட்ட வாடகைத் தொகை ரூபா 82,908 செலவினம் ஒன்றாக இருந்ததுடன் இந்த காணியில் களஞ்சியத்தை நிர்மாணிக்கும் தேவை தற்போது காணப்படாது இருந்ததாக தீர்மானிக்கப்பட்ட போது கணக்காய்வுத் திகதி வரையிலும் இந்தக் காணியை மீளக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	மானிய உரம் பகிர்ந்தளிக்கும் காலப் பகுதியில் நாடு முழுவதும் உரத்தை பகிர்ந்தளிக்கும் பணிகளை தொடர்ந்தும் செயற்திறனாக மேற்கொள்ளும் நோக்கில் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு உரத்தைக் கொண்டு வந்து அந்த துறைமுகத்திற்கு வாடகைக் காணியில் நிர்மாணிப்பதற்கு உத்திதேசிக்கப்பட்ட களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தி அருகில் உள்ள பிரதேசங்களுக்கு உரத்தைப் பகிர்ந்தளிக்கும் பரிந்துரைக்கும் இலக்கினை நிறைவேற்றுவதாக இந்த அம்பாந்தோட்டை காணி வாடகை உடன்படிக்கையின் கீழ் கைப்பற்றப்பட்டிருந்தது. எனினும் மாணிய உரக் கொள்கைகளில் ஏற்பட்டிருந்த மாற்றங்களைப் போன்று வழங்குனர்களும் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு உரத்தை விநியோகிப்பதற்காக கேள்வி சமர்ப்பிக்காமையின் காரணமாக இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாது இருந்தது. இந்த சந்தர்ப்பம் வரையிலும் உரிய விடயங்கள் பணிப்பாளர் சபைக்கு தெளிவுபடுத்தப்பட்ட பின்னர் இந்த வாடகை காணி மீண்டும் மகாவலி அதிகார சபைக்கு கையளிக்கப் பட்டுள்ளது.	வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும்.

(ஆ)	காலப் பகுதியின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 130,323,110 மீதி காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் மூன்று மாத காலப் பகுதயில் கம்பனியினால் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி மேலதிக வட்டி செலவினமாக ரூபா 2,315,872 செலுத்தப்பட்டிருந்தது.	எமது கம்பனி வணிக செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற கம்பனியாக மக்கள் வங்கி மற்றும் இலங்கையின் கீழ் வங்கி மேலதிகப் பற்று வசதிகள் எங்களின் நடைமுறைக் கணக்கிற்காக வழங்கப்பட்டுள்ளது. தேயிலை அபிவிருத்தி சபை மற்றும் உடன்படிக்கை செய்து ஆரம்பிக்கப்பட்ட கலவை உர செயற்திட்டத்தின் ஆரம்பத் தொழிற்படு மூலதனத் தேவைக்காக இந்த குறுங்கால வங்கி மேலதிகப் பற்று வசதி பயன்படுத்தப்பட்டது. உர விற்பனையுடன் கிடைக்கின்ற ஏற்பாடுகளில் இந்த வங்கி மேலதிக பற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்போது கம்பனியில் வங்கி நடைமுறைக் கணக்கில் செலவு மீதி காணப்படுகின்றது.	நிதி முகாமைத்துவக் கடன் சிக்கனமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.